# இசைத்தென்றல் ம. யேசுதாசன்

ஆழத்து முத்துக்கள் 94

எமது பாரம்பரிய நாடக வடிவங்களில் இசையே பிரதான அம்சமாக இயங்கிவந்தது. ஒரு நாடக ஆரம்பத்தின் முன்பாக இசைக்கருவிகளின் சுருதிகள் சரிசெய்யப்படும் சத்தம் கேட்டதுமே மண்டபம் மௌனித்துவிடுகிறது. அதிலும் ஹார்மோனிய இசையைக் கேட்க ஆரம்பித் ததும் எங்கள் நாடி நரம்புகள் எல்லாம் அதிரத்



தொடங்குகின்றன. அது எங்களை வேறு ஒரு தளத்துக்கு அழைத்துச் செல்லும். அத்தகைய இசையை வழங்கி நாடகங்களுக்கு உயிரூட் டியவர் எங்கள் இசைத்தென்றல் ம. யேசுதாசன் அவர்கள்.

1971இல் யாழ். துரையப்பா ஸ்ரேடியத்தில் திருமறைக் கலாமன்றத்தினர் நடத்திய 'யேசு வின்பாடுகள்' நிகழ்ச்சியின் போது ஒலித்த பாடல்களை எவரும் இலகுவில் மறந்திருக்க முடியாது. புதிய இசை, புதிய மெட்டு, இலகு தமிழ் என்று அப்பாடல்கள் அனைவர் இதயங் களையும் வருடிச்சென்றன. இதற்கு முன்பாக நடந்த நிகழ்ச்சிகளில் எல்லாம் தென்னிந்தியப் பக்திப் பாடல்களின் இசைக்குப் பாட்டெழுதிப் பாடிவந்தனர். இந்த இசையிலிருந்து விடுபட்டு யேசுவின் கதையுடன் கலந்த நெஞ்சை அள்ளும் பாடல்களை உருவாக்கியவர் யேசுதாசன்.

'ரத்தம்... ரத்தம் செக்கச் சிவந்த ரத்தம்...'

'துன்பத் தைல மரக்காவில்...'

'அன்பின் பழிபடரும் அமலனம்மா...'

'யார் நீ இறைவா...'

ஆகிய இந்தப் பாடல்கள் இன்றும் பல கிறிஸ் தவ நிகழ்ச்சிக்களிலும், வீடுகளிலும் ஒலிப்ப தைக் கேட்கலாம். சவரிமுத்து அடிளார் எழு திய இப்பாடல்களில் பலவற்றை யேசுதாசன் பாடியுமிருந்தார்.

யாழ்ப்பாணம் சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட யேசுதாசனின் தந்தையார் மடுத் தீனுப்பிள்ளை அவர்கள் ஒரு பிரபல்யமான மிருதங்க வித்துவான். தந்தையாரின் சகோதரர் சட்டம்பியார் சவரிமுத்து அவர்கள் ஏழு நாட்டுக் கூத்துக்களை எழுதி மேடையேற்றிய பெருங் கலைஞர்.

தந்தை வழி கூத்திசையில் ஆர்வம் கொண்ட யேசுதாசன் தனது ஆறாவது வயதில் ஹார் மோனியம் கற்றுக்கொள்ளும் விருப்பத்தைத் தந்தையிடம் தெரிவித்தார். கொழும்பிலிருந்து ஒரு புதிய ஹார்மோனியத்தை வாங்கி மகனின் ஆசையை தந்தையார் பூர்த்தி செய்தார். எனினும் ஹார்மோனியத்தை முறைப்படி கற் பிக்கின்ற ஆசிரியர் எவரும் இவருக்குக் கிடைக்கவில்லை. இறுதியில் நடிகமணி வி.வி. வைரமுத்துவின் சகோதரனான பிள்ளையானி டம் ஹார்மோனியம் கற்று தனது பத்தாவது வயதில் யேசுதாசன் நாடகங்களுக்கு ஹார் மோனியம் வாசிக்க ஆரம்பித்தார்.

இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரியில் கல்வி பயின்ற இவரை யாழ். மறைமாவட்ட ஆயர் எமிலியானுஸ்பிள்ளை அவர்கள் இறை யியல் படிப்புக்காக சென்னைக்கு அனுப்பினார். அங்கு மறையாசிரியருக்கான பட்டப் படிப்பை முடித்ததோடு யேசுதாசன் அவர்கள் மூன்று ஆண்டுகள் அடையாறு கர்நாடக இசைக்கல் லூரியில் பயின்று 'இசைமாமணி' பட்டத்தை யும் பெற்றுக்கொண்டார். இக்கல்லூரியில் வயலின், மிருதங்கம், தபேலா போன்ற வாத் தியங்களைத் கற்றுத் தேர்ந்தார். இந்நாட்களில் சங்கீத பூஷணம் யோசப் கிருஷ்ணபிள்ளை அவர்களிடம் முறைப்படி சங்கீதம் பயின்று சிறந்த பாடகரானார். அது மட்டுமல்லாது, மேற்கத்திய இசையையும் கற்க வேண்டும் என்ற ஆர்வத்தில் சென்னையிலிருந்த தனராஜ் என்ற இசைக்கலைஞரிடம் பியானோ வாசிக்க பயின்றார். தனராஜ் அவர்களிடம்தான் இளைய ராஜாவும் பியானோ இசை கற்றது குறிப் பிடத்தக்கது.

இவ்வாறு இறையியல் பட்டப்படிப்பை முடித்து சகல வாத்தியங்களையும் இசைக்கவல்ல பெருங்கலைஞராக மிளிர்ந்த இசைமாமணி யேசுதாசன் அவர்கள் 1970இல் யாழ்ப்பாணம் திரும்பிவந்ததும் யாழ். மறைமாவட்ட மறைக் கல்வி நிலையத்தில் வேலைக்கு அமர்த்தப் பட்டதுடன் ஆலய திருவழிபாட்டு இசைக்குப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

இதன் பின்னர் யாழ் திருமறைக் கலாமன் றத்தின் ஸ்தாபகர் சவரிமுத்து அடிகளாருடன் ஏற்பட்ட தொடர்பு காரணமாக எமது பாரம் பரியான நாடகங்களுக்கு இசை அமைத்தும், நாடகங்களை நெறியாள்கை செய்தும் இவர் புதிய பரிமாணத்தைத் தொட்டார். திருமறைக் கலாமன்றத்தின் இசைப் பொறுப்பாளராக இருந்து பல நாட்டுக்கூத்துகள், இசை நாட கங்கள், சரித்திர நாடகங்கள் போன்றவற் றுக்கு இசை வழங்கி நாடகங்களுக்கு மெரு கூட்டினார்.

எஸ்த்தாக்கியார், தேவசகாயம்பிள்ளை, சங்கி லியன், நீயொரு பாறை போன்ற நாட்டுக் கூத்துக்களும் பாரி, கும்பகர்னன் வகைப் படலம் ஆகிய சரித்திர நாடகங்களும் மயான காண்டம், ஏழுபிள்ளை நல்லதங்காள், ஞான சௌந்தரி போன்ற எண்ணற்ற இசை நாட கங்களும் யேசுதாசன் இசையமைத்தவற்றில் குறிப்பிடத்தக்க நாடகங்கள். இவை தவிர, தாசீசியஸ் தயாரித்த மஹாகவியின் கோடை, புதியதொரு வீடு ஆகிய இரு நவீன நாட கங்களுக்கு இசையமைப்பாளர் கண்ணனுடன் இணைந்தும் மற்றும் சாகாத மனிதம், வரலாறு ஆகிய நாடகங்களுக்குத் தனித்தும் இசை வழங்கினார்.

இவர் எழுதி நெறியாள்கை செய்த சத்திய சோதனை மற்றும் தர்மத்தில் பூத்த மலர்கள் ஆகிய நாடகங்களைத் திருமறைக் கலாமன் றம் இரு நூல்களாக வெளியிட்டுள்ளது.

யுத்த நாட்களில் சமாதானத்தை வலியுறுத்தும் வகையில் திருமறைக் கலாமன்றம் கொழும் பில் மருதானை எல்வின்ஸ்டன் அரங்கில் அசோகா, தர்சனா என்ற இரு மௌன நாட கங்களை மேடையேற்றிய போது அந்நாட கங்கள் முழுவதுமாக இழையோடிய இசையை யேசுதாசன் வழங்கியிருந்தார். காட்சிகளை அற்புதமாக விளக்கும் சிம்பொனி இசை நாடகத்தில் ஒலித்ததாக பத்திரிகைகள் இவ ரைப் பாராட்டி எழுதியிருந்தன.

இலங்கையின் பிரபல நாட்டியக் கலைஞர் வேல் ஆனந்தன் அவர்கள் தயாரித்த பத்மா சுரன் 77, பாரிஜாதம், அருளும் இருளும் ஆகிய மூன்று நாட்டிய நாடகங்களுக்கும் சிறப்பான பாடல்களை வழங்கியதோடு நட்டி யத்திற்கான இசையையும் அமைத்திருந்தார்.

1986இல் அப்போதைய யாழ். மாநகரசபை முதல்வராக இருந்த திரு. சிவஞானம் அவர் கள் தயாரித்த பூதத்தம்பி என்ற வரலாற்றுத் திரைப்படத்திற்கு இசையமைத்தவர் யேசுதாசன். இத்திரைப்படத்தில் தேலங்கிச் செல்லையா என்பவர் கதாநாயகியாக நடித்தது குறிப்பி டத்தக்கது.



திருமறைக் கலாமன்றத்தின் இசைக்குழுவிற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டதும் ஏறத்தாள 30 இசைக் கலைஞர்களைக் கொண்டு பல்வேறு இசை நிகழ்ச்சிகளை நிகழ்த்தினார். சினிமாப் பாடல்கள் அல்லாது சொந்தமாக இயற்றி இசையமைத்த பாடல்களே இந்நிகழ்ச்சிக ளில் பாடப்பட்டன. இசைமாலை, மண்ணின் ராகங்கள், விண்ணின் கானங்கள், பொங்கல் பொழுது, சப்த கானங்கள் என்பன இவர் நடத்திய இசை நிகழ்ச்சிகளில் சிலவாகும்.

இவர் இசையமைத்த 40 ஒலித்தட்டுக்கள் இதுவரை வெளிவந்துள்ளன. இவற்றில் குழந் தைப் பாடல்கள், பக்திப் பாடல்கள், திருவுந் தியாரின் மெய்கண்ட சாத்திரம், இசைவிடு தூது என்ற சமாதானத்துக்கான பாடல்கள் மற்றும் எமது இசை நாடகங்கள், நாட்டுக் கூத்துக்களிலிருந்து எடுக்கப்பட்ட 253 இராகங் களின் தொகுப்பு உட்பட 20 ஒலித்தட்டுக் களைத் திருமறைக் கலாமன்றம் வெளியிட்டது. மிகுதி சொந்தமாகவும், வேறு அமைப்புகளு டனும் இணைந்து வெளியிடப்பட்டன. சவரி முத்து அடிகளாரும், யேசுதாசனும் இப்பாடல் களை யாத்திருந்தனர்.

இந்நாட்களில் திருமறைக்கலாமன்றம் மேற் கொண்ட ஐரோப்பியக் கலைப்பயணத்தில்

**- ப. ஸ்ரீஸ்கந்தன் -**

இவர் ஒரு முக்கிய கலைஞராகக் கலந்து கொண்டு பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ்லாந்து, இலண்டன் ஆகிய நாடுகளில் இடம்பெற்ற கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்றுச் சிறப்புச் செய்தார்.

கனடா வருகைக்குப் பின்னர் ஒப்பனைக் கலைஞர் ஆனந்தனுடன் இணைந்து பாட்டு, வயலின், ஹார்மோனியம் ஆகியவற்றை மாணவர்களுக்குக் கற்பித்து வருகிறார். மேலும் இங்கு 'மனம் போல மாங்கல்யம்' என்ற ஷேக்பியரின் கதையை நாட்டுக்கூத்தாக மேடையேற்றிய போது அதற்கு இவர் சிறப் பாக இசை அமைத்திருந்தார். இதனைத் தொடர்ந்து 'சாம்சன் டிலைலா' என்ற பைபிள் கதையினை நாட்டுக்கூத்தாக எழுதி, இசைய மைத்து, நெறியாள்கை செய்து இவர் மேடை யேற்றினார். தொடர்ந்து மேடையேறிய விஜய மனோகரன் கூத்திற்கும் இவர் இசை வழங்கிய துடன் அதனை நெறியாள்கையும் செய்தி ருந்தார்.

இங்கு நடன ஆசிரியைகளை இணைத்து திருமறைக் கலாமன்றம் அரங்கேற்றிய 'பஞ்ச பூதங்களின் தரிசனம்' என்ற நாட்டிய நாட கத்துக்கு இசையமைப்பு செய்த யேசுதாசன் அண்மையில் கலாமன்றம் மேடையேற்றிய 'காவிய நாயகன்' என்ற யேசுவின்பாடுகள் நிகழ்ச்சிக்கும் இசை அமைத்ததுடன் அதனை நெறியாள்கையும் செய்திருந்தார்.

இவரது இசைச்சேவையைப் பாராட்டி 1985இல் யாழ். திருமறைக் கலாமன்றம் இவருக்கு 'இசைத்தென்றல்' என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. 1991இல் சாம்சன் டிலைலா என்ற கூத்தினை மேடையேற்றிய போது யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களால் 'அண்ணாவியார்' என்ற பட்டம் வழங்கப்பட் டது. மேலும், 2010இல் இலங்கை அரசின் கலாச்சார அமைச்சு இவருக்கு இசைக்கான தேசிய விருதினை வழங்கியது. 2012இல் கனடா சில்லாலை மக்கள் ஒன்றியம் 'மறையிசை மாமணி' என்ற பட்டத்தை வழங்கிப் பெருமை சேர்த்தது.

எமது நாட்டார் கலைவடிவங்களின் மூலமான இசையைக் கையாள்வதில் வல்லவராகவும், அடுத்த தலைமுறைக்கு அதனை எடுத்துச் செல்லும் முயற்சியில் ஈடுபட்டுவருபவருமான அண்ணாவியார் யேசுதாசனின் பணி மேலும் தொடர வாழ்த்துக்கள்.



sriskandan@thaiveedu.com

**உங்களுக்குத் தெரிந்த கலைஞர்கள் பற்றி நீங்களும் எழுத வேண்டுமா?**

**கலைஞர்கள் பற்றிய விபரங்கள், அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி எண், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டுக்கு அனுப்பிவையுங்கள்.**

**Thaiveedu**
**Woodside Square, P.O.Box #63581, 1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**